2023 ஒக்டோபர

பிரஜை

அடிமட்டத்திலான பேச்சுவார்த்தை 1

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் நுண்நிதிச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட பெண்கள். (புகைப்படம் www.dailymirror.lk)

எமது தலையீடுகளால் சாதகமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன 04

இவை ஒழுங்குபடுத்துதல் மூலம் சீர்செய்யப்பட வேண்டிய பிரச்சினைகளாகும் 06

நுண்நிதிச் செயற்பாடுகள், வறுமை நிலை மற்றும் அரசியல் 08

ஏழைகளின் வங்கியாளர் 09

நுண்நிதி நிறுவனங்களின் செயலாற்றுகை 10



நுண்நிதிச் செயற்பாடுகளில் அரசின் தலையீடு

நுண்நிதிச் செயற்பாடுகளும் ஏனைய பெரும்பாலான விடயங்களைப் போன்று அரசியல் கைப்பொம்மையாக மாறியுள்ளது. இலங்கை அரசானது நுண்நிதித் துறையின் பிரதான தீர்மானமெடுக்கும் சக்தியாகும். நுண்நிதி நிறுவனங்களுக்கு (MPLS) நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கும் போது அரசு பிரதான வகிபாகத்தை வகிக்கிறது. இது பெரும்பாலான நிறுவனங்களின் நிதி செயற்பாடுகளில் தாக்கம் செலுத்துவதாகவும், நுண்நிதி நிறுவனங்களின்

02

கடன் நெருப்பில் எரியும் வீட்டின் கடவுள்

இலங்கைத் தீவின் நாற்புறங்களிலும் இருந்து வருகைதந்த மக்கள் குடியேற்றங்களை அமைத்ததோடு புது நிலத்தில் வேரூன்றுவதற்காக மேற்கொண்ட முயற்சிகளுக்கு எல்லையில்லை. தாயகத்தைக் கைவிட்டு, புலம்பெயர்ந்து வந்த இம்மக்கள் ஆரம்பத்தில் வானம், பூமி, விலங்குகள் மற்றும் மலேரியா போன்ற நோய்களுடன் போராடினார்கள். அது ஒருபோதும்

11

01 ஆம் பக்கத் தொடர்ச்சி

நுண்நிதிச் செயற்பாடுகளில்...

சுயாதீனத்தை அது குறைக்கும் எனவும் பெரும் கவலை வெளியிடப்படுகிறது.

பெரும்பாலான அரசியல் கட்சிகள் தமது அரசியல் நோக்கங்களுக்காக நுண்நிதி நிறுவனங்களில் கடன்பட்டோரை பயன்படுத்துகின்றனர். பொதுவாக வாக்காளர்களின் ஆதரவை பெறுவதற்கான வழியாக இந்த நுண்நிதிச் செயற்பாடுகளை பாவித்து வருகின்றனர். வட்டியை குறைத்தல், பெற்ற கடனுக்கு சலுகைக் காலத்தை வழங்குதல், தமது ஆதரவாளர்களுக்கு நுண்நிதி கடன்களை வழங்குதல் மற்றும் சில பிரதேசங்களில் நுண்நிதி நிறுவனங்களை உருவாக்குவதாக வாக்குறுதி வழங்குதல் போன்ற உத்திகளை அவர்கள் கையாள்கின்றனர். நுண்நிதி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் அரசியல்மயமாக்கப்பட்டமை தொடர்பிலான கவலையின் வெளிப்பாடாக அரசினால் 2016ஆம் ஆண்டில் நுண்நிதி சட்டம் நிறைவேற்றப்பட்டது. இருந்த போதிலும் அந்த சட்டம் கூட அளவுக்கு அதிகமாக வரையறுக்கப்பட்டிருத்தல் மற்றும் இந்தத் துறை தொடர்பில் தேவையான அளவை விடவும் கூடுதலான கட்டுப்பாட்டை அரசுக்கு வழங்குதல் தொடர்பாகவும் பாரிய விமர்சனம் உள்ளது.

நுண்நிதி செயற்பாடுகளின் செயலாற்றுகை குறைவடைதல், கடனை மீள செலுத்தாதிருக்கும் அச்சுறுத்தல் அதிகரித்தல்.

ஏழைகள் நுண்நிதி வசதிகளை பெறுவதற்கான வாய்ப்புகள் குறைதல்.

ஊழல் மற்றும் வாடகைக்கு எடுத்தல் அதிகரித்தல்.

நுண்கடன் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் (புகைப்படம் CPA)

> **பெரும்பாலான அரசியல் கட்சிகள் தமது அரசியல் நோக்கங்களுக்காக நுண்நிதி நிறுவனங்களில் கடன்பட்டோரை பயன்படுத்துகின்றனர். பொதுவாக வாக்காளர்களின் ஆதரவை பெறுவதற்கான வழியாக இந்த நுண்நிதிச் செயற்பாடுகளை பாவித்து வருகின்றனர்.**

இலங்கையில் நுண்நிதிச் செயற்பாட்டினை வறுமையை குறைப்பதற்கான சாதகமான போக்குடையதாக தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியுமென உறுதிப்படுத்துவதாயின், நுண்நிதிச் செயற்பாட்டினை அரசியல் கலப்பற்றதாக மாற்றுவதற்கான முயற்சிகள் அவசியம் என்பது பெரும்பாலானோரின் கருத்தாகும்.

நுண்நிதித் துறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துதல், நுண்நிதிச் சட்டத்தை சமகாலத்துக்கு பொருந்தும் வகையிலும், குறைந்த வரையறைகளைக் கொண்டதுமாக மாற்றுவதும் முக்கியமானதாகும்.

– பிரஜை –

பெண்களே அதிகம்

உரிமம் பெற்ற அரச மற்றும் தனியார் வணிக வங்கிகள், பிரதேச அபிவிருத்தி வங்கிகள், நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளின் வாடிக்கையாளர்களில் கூடுதலானோர் ஆண்களாவர். அது சதவிகித அடிப்படையில் 61% - 68% ஆகும். சமுர்த்தி வங்கிச் சங்கங்கள், சிக்கன மற்றும் கடன் கூட்டுறவுச் சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர். அது சதவிகித அடிப்படையில் 60% - 67% ஆகும். பெண்கள் கடன் பெறும் பெரும்பாலான வங்கிகள் நுண்நிதி நிறுவனங்கள் ஆகும். இதனால் இலங்கையில் நுண்நிதிச் சேவை பெறுபவர்களில் கூடுதலான சதவிகிதத்தினர் பெண்களாவர்.

கடன் வழங்குவோர்

நுண்நிதி நிறுவனங்கள் கடன் சேவைகளை வழங்குவதுடன், அதற்கு மேலதிகமாக சேமிப்பு, காப்புறுதி மற்றும் கொடுப்பனவுச் சேவைகள் உள்ளடங்களாக ஏனைய நிதிச் சேவைகளையும் வழங்குகின்றன. அத்துடன் சில ஆலோசனைச் சேவைகளையும் வழங்குகின்றன. இலங்கையின் நுண்நிதித் துறை பன்மைத்துவம் மிக்க பல நிறுவனங்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. அவையாவன சேமிப்புக் கம்பனிகள், சீட்டு முறைகள், கடன் வழங்கும் சங்கங்கள், மரண உதவி மற்றும் நலன்புரிச் சங்கங்கள் உள்ளிட்ட சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் சங்கங்கள் கம்பனிகள் என்பவையாகும். அந்த நுண்நிதிப் பிரிவுகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

- பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மற்றும் ஏனைய விசேட வங்கிகள்
- கூட்டுறவு கிராமிய வங்கிகள் மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள்
- சிக்கன மற்றும் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் (சி.க.கூ)
- சமுர்த்தி வங்கிச் சங்கங்கள்
- அரச சார்பற்ற அமைப்புகளின் நிதி நிறுவனங்கள்
- ஏனைய நிதி நிறுவனங்கள் (நுண்நிதிச் சேவைகளை வழங்கும் வணிக வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்)

புகைப்படம் freepik.com

நுண்நிதிச் செயற்பாடுகள் என்பது

500 மில்லியனுக்கு கூடுதலான பொருளாதார இயலுமையற்ற ஏழை மக்கள் உலகெங்கும் நுண்நிதி இயக்கங்கள் மற்றும் சிறு வர்த்தகங்களில் ஈடுபடுவதாக வுமன்ஸ் வேர்ல்ட் பேங்கிங் (Women's World Banking 1995) எனும் நிறுவனத்தினால் கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோருக்கு நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை இல்லை. அவ்வாறு குறைந்த வருமானம் பெறும் குழுக்களின் நன்மைக்காக பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறையாக நுண்நிதி முறைமைகள் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளன. அதற்கமைய நுண்நிதி முறைமை என்பது, வறுமையை குறைப்பதற்காக பயன்படுத்தக்கூடிய மிகச் சிறந்த அபிவிருத்தி முறைமை என்பதனால் உலகில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நுண்நிதிச் செயற்பாடுகள் மிகவும் பிரபலமடைந்துள்ளன. இலங்கையின் பொருளாதாரத்திலும் நுண்நிதிச் செயற்பாடுகள் துளிர்விட்டு வளர்ச்சியடைந்தன. நுண்நிதி முறைமை தொடர்பான தெளிவான வரைவிலக்கணம் செய்வது சிரமமானது என்ற போதிலும், சேமிப்பு மற்றும் கடனுடன் இணைந்த சேவைகள் என அதனை எளிமையாக புரிந்து கொள்ளலாம். அதற்கமைய, வருமானம் குறைந்த மற்றும் சுய வருமானம் ஈட்டும் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்குதல் இதன் மூலமாக இடம்பெறுகிறது.

நுண்நிதிச் செயற்பாடுகள் என்கின்ற போது செயற்பாட்டு மூலதனத்துக்கு தேவையான சிறு கடன் வழங்குதல், கடன் பெறும் நபர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் தொடர்பான முறைசாரா மதிப்பீடு, குழுக்களின் கூட்டுப் பிணை அல்லது கட்டாய சேமிப்பு போன்ற பிணைப் பாதுகாப்பு தேவைப்பாடுகளுக்கான மாற்றீடுகளை வழங்குதல், கடனை மீள செலுத்துவதற்கான இயலுமை மற்றும் செயலாற்றுகை மற்றும் செயலாற்றுகையை அடிப்படையாக கொண்டு மீண்டும் மீண்டும் கடன் பெறுதல் மற்றும் பாரிய கடனைக் கோருவதற்கான இயலுமை, கடனை விடுவித்தல் மற்றும் தொடராய்வு செய்தல், பாதுகாப்பான சேமிப்புகள் மற்றும் உற்பத்திகள் போன்றவற்றை சுட்டிக்காட்ட முடியும். நுண்நிதி நிறுவனங்களாக சேமிப்பு மற்றும் கடன் சங்கங்கள், கடன் வழங்கும் சங்கங்கள், அரச வங்கிகள், வணிக வங்கிகள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும்.

வட்டிக்கு பணம் வழங்குவோர், தங்க நகைகளை அடகு பிடிப்போர், சீட்டு மற்றும் கடன் சங்கங்கள், பினான்ஸ் கம்பனிகள் போன்ற முறைசாரா நுண்நிதிச் சேவை வழங்குனர்களும் உள்ளனர்.

இந்த நிறுவனங்களின் செயலாற்றுகை பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் பல்வேறு ஒழுங்குபடுத்தல்களுக்கு அமைய இலங்கைப் பொருளாதாரத்தில் அடையாளம் காணலாம். இதற்கு மேலதிகமாக வட்டிக்கு பணம் வழங்குவோர், தங்க நகைகளை அடகு பிடிப்போர், சீட்டு மற்றும் கடன் சங்கங்கள், பினான்ஸ் கம்பனிகள் போன்ற முறைசாரா நுண்நிதிச் சேவை வழங்குனர்களையும் இலங்கைப் பொருளாதாரத்தின் நுண்நிதிச் செயற்பாட்டினுள் அடையாளம் காணலாம்.

இவ்வாறு இயங்கும் நுண்நிதி நிறுவனங்கள் மூலம் குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடுவோர், சுயதொழில் புரிவோர் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு அவசியமான நிதி மற்றும் ஆலோசனைகளை வழங்கி, அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுறது. அதன்மூலம் நுண்நிதிச் சேவை பெறுவோரின் பங்கேற்பு அபிவிருத்தியை பேணிச் சென்றவாறு அவர்களது தொழில்முயற்சி மேம்படுத்தல் இடம்பெறுவதுடன், அவர்கள் ஊடாக உயர்ந்தளவு தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் கிராமிய வறுமையை குறைத்து, கிராமிய அபிவிருத்தியை அடைவதற்கான வாய்ப்புகளை வழங்குதலும் இலங்கை பொருளாதாரத்தின் நுண்நிதிச் செயற்பாட்டினுள் அடையாளம் காணக்கூடிய சிறப்பம்சமாகும்.

– பிரஜை –

எமது தலையீடுகளால் சாதகமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன

சுரங்க ரூபசிங்ஹ
பொருளாதார ஒத்துழைப்பு மன்றம்,
கந்தளாய்

நாம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து பொலநறுவை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நீண்ட காலமாக செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். இந்த பிரதேசங்களில் வசிக்கும் அதிகளவான பெண்கள் நுண்நிதிக் கடன் பொறியில் சிக்கியுள்ளனர். எமது தலையீட்டின் மூலம் அந்த மக்களுக்கு ஓரளவு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது.

நுண்நிதிக் கடன் எனும் எண்ணக்கரு மிகவும் சிறந்தது. இருப்பினும் நல்ல நிறுவனைங்களைப் போன்று தவறான நிறுவனங்களும் அவற்றில் நுழைந்தமை காரணமாக அது மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக சொல்வதாயின், "சணச" பற்றி எமக்கு தெரியும். இவர்கள் கடன் தவணைப் பணத்தை சேகரிப்பதற்காக வீடுகளுக்கு வரும்போது, அவர்கள் வந்ததற்கான போக்குவரத்து செலவையும் கடன் தொகையுடன் சேர்ப்பார்கள். ஒரு தடவை வந்து சென்ற போதிலும் இரண்டு அல்லது மூன்று தடவைகள் வந்து சென்றதாக குறிப்பிட்டு போக்குவரத்துச் செலவை அறவிடுகின்றனர். அத்துடன் சில நிறுவனங்கள் கடன் வழங்கும் போது பிணையாக காணி உறுதிகளை வாங்கி வைத்துக் கொள்கின்றன. நுண்நிதிச் சட்டத்துக்கமைய அவ்வாறு காணி உறுதிகளை பிணையாக வைத்திருக்க முடியாது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து நாம் இந்த பிரதேசங்களுக்கு வரும் போது தற்கொலை செய்து கொள்வது மற்றும் பாரிய நெருக்கடிகள் தொடர்பாக கேள்விப்பட்டோம்.

இதில் கடன் தவணைப் பணத்தை சேகரிப்பதற்காக வீடுகளுக்கு வரும்போது, அவர்கள் வந்ததற்கான போக்குவரத்து செலவையும் கடன் தொகையுடன் சேர்ப்பார்கள். ஒரு தடவை வந்து சென்ற போதிலும் இரண்டு அல்லது மூன்று தடவைகள் வந்து சென்றதாக குறிப்பிட்டு போக்குவரத்துச் செலவை அறவிடுகின்றனர்.

நாம் இந்த பிரச்சினையின் போது எங்களால் வழங்கக்கூடிய ஒத்துழைப்புகள் எவையென ஆராய்ந்து பார்த்தோம். சட்ட உதவி வழங்குதல் அவற்றில் முதன்மையான விடயமாகும். அதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஒத்துழைப்பு குறைவின்றி கிடைத்தது. அடுத்த விடயம் பொருளாதார அறிவை பெற்றுக் கொடுப்பதாகும். அந்த செயற்பாடுகளையும் நாங்கள் தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறோம்.

யாராவது கடன் கொடுத்தால் வட்டி வீதம் எவ்வளவு என்றுகூட பார்க்காமல் கடனைப் பெறுவது இந்த பிரதேசங்களில் உள்ள பொதுவான பண்பாகும். அது பொருளாதார அறிவின்மையின் வெளிப்பாடாகும். இப்போது, எங்கிருந்து கடன் பெற வேண்டும்

நுண்கடன் பிரச்சினைகள் குறித்து கந்தளாய் பிரதேசத்தில் கலந்துரையாடல்.(புகைப்படம் CPA)

புகைப்படம் CPA

என்பதும் குறைந்த வட்டி வீதம் தொடர்பான விடயங்களும் அவர்களுக்குத் தெரியும்.

நாம் இதன்போது பிரச்சினைகளை அடையாளம் கண்டு மனித உரிமைகள் ஆணைக்குழு, தகவலறியும் உரிமை ஆணைக்குழு போன்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று அந்த மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முயற்சிகளில் ஈடுபட்டோம். அத்துடன் மத்திய வங்கியுடனும் இணைந்து செயற்பட்டோம். போதுமானளவு வளவாளர்களின் பங்களிப்பு இல்லாதிருத்தல் மத்திய வங்கியின் நிலவும் பிரதான பிரச்சினையாக உள்ளது. அந்த உதவியை நாங்கள் வழங்கினோம். கடன் சுமையால் சூறையாடப்பட்ட உண்மையான பிரச்சினைகள் உள்ள நபர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மத்திய வங்கி அலுவலர்களை சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து சில கடன்களை அறவிடமுடியாக் கடன்களாக கருதி இரத்துச் செய்வதற்கும், கடன் சலுகை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தோம். காணிகளின் உறுதிகளை வாங்கிக்கொண்டு கடன் வழங்கிய நிறுவனங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து, அவற்றை மத்திய வங்கி ஊடாக விடுவிப்பதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கிராமங்களிலுள்ள கடன் பெற்ற நபர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு பொருளாதார அறிவை வழங்கும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நாம் மேற்கொண்டு வருகிறோம். அவ்வாறான மக்களை ஒன்றிணைத்து மத்திய வங்கிக்கு அனுப்பும் செயற்பாடுகளையும் மேற்கொள்கிறோம். அந்த செயற்பாடுகள் தற்போது சிறந்த பெறுபேறுகளை பெற்றுத் தந்துள்ளன. சிறந்த நோக்கமும் அர்ப்பணிப்புடன் வேலை செய்யும் எண்ணமும் இருந்தால் இந்தப் பிரச்சினையை இதனை விடவும் வெற்றிகரமான முறையில் தீர்த்து வைக்கலாம் என்ற விடயமானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து நாம் முன்னெடுத்த வேலைகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நுண்கடன் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் இடம்பெற்ற செயலமர்வு (புகைப்படம் CPA)

நுண்நிதிச் செயற்பாடுகளின் சாதக மற்றும் பாதக நிலைமைகள்

நுண்நிதிச் செயற்பாடுகள் இலங்கை மக்களுக்கு சாதகமாகவும், பாதகமாகவும் அல்லது நன்மையாகவும், தீமையாகவும் என இரு வழிகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

சாதகமான தாக்கங்கள்

வறுமையை ஒழிப்பதற்கு நுண்நிதிச் செயற்பாடுகள் உதவியிருப்பது சாதகமானதாகும். நுண்நிதிக் கடன் பெறுவோர் கடன் பெறாத நபர்களை விடவும் வறுமையிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகமானது எனும் விடயம் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. நுண்நிதிச் செயற்பாடுகள் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு உதவியுள்ளன. நுண்நிதிக் கடன் பெறுவோர் தமது தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அல்லது விரிவாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும் அதேவேளை, அதன்மூலம் தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, அது பொருளாதார வளர்ச்சியிலும் பங்களிப்பு செய்கின்றது. நுண்நிதிச் செயற்பாடுகள் பெண்களை பலப்படுத்தியுள்ளன. நுண்நிதிக் கடன் பெறுவோரில் பெரும்பாலானோர் பெண்கள் என்பதுடன், நுண்நிதிச் செயற்பாடுகள் அவர்களது வருமானம், சொத்துக்கள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தை அதிகரித்துக்கொள்ளவும் அவர்களுக்கு உதவியுள்ளது.

பாதகமான தாக்கம்

சில நுண்நிதிக் கடன் பெறுவோர் கடன் பொறியில் சிக்கியுள்ளார்கள். இயற்கை அனர்த்தங்கள் அல்லது சுகவீனம் போன்ற எதிர்பாரா நிலைமைகள் காரணமாக கடன் பெறுபவர்களால் தமது கடனை மீள செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில் இந்த நிலை இயல்பாகவே இடம்பெறலாம். சில நுண்நிதி நிறுவனங்கள் கொள்ளையடிப்பது போன்று கடன் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டப்படுகிறது. அவர்கள் மிக அதிகமான வட்டி வீதத்தையும் கட்டணங்களையும் அறவிடுவதோடு கடன் பெற்றவர்களுக்கு அந்தக் கடனை மீள செலுத்துவது இதன் காரணமாக சிரமமாகியுள்ளது என்பதே அதன் கருத்தாகும். வறுமையின் அடிமட்டத்திலுள்ள மக்களை நோக்கி நுண்நிதிச் செயற்பாடுகள் எப்போதுமே சென்றடையவில்லை. சில நிறுவனங்கள் மத்தியதர வருமானம் பெறுவோரை இலக்காகக் கொண்டு தமது கடன் திட்டங்களை அமுல்படுத்துகின்றன.

ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது இலங்கையில் நுண்நிதிச் செயற்பாடுகள் சாதகமாகவே உள்ளன. இருப்பினும் மிகக் கூடுதலான வட்டி வீதம் மற்றும் கொள்ளையடிக்கும் வகையிலான கடன் வழங்கும் முறை போன்ற விடயங்களைக் கையாளும் சவால்களும் காணப்படுகின்றன. இலங்கையின் நுண்நிதிச் செயற்பாடுகளின் மூலம் நன்மை பெற்ற நபர்களின் உதாரணங்களைப் பார்ப்போம்.

இலங்கையின் வடக்கில் கிராமப்புறத்தில் வாழ்ந்த ஒரு பெண் சிறிய மரக்கறி விற்பனை நிலையமொன்றினை ஆரம்பிப்பதற்காக நுண்நிதித் திட்டத்தின் கீழ் கடன் பெற்றார். அந்தக் கடன் தொகையைப் பாவித்து தனது வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கும், குடும்பத்திற்குத் தேவையான வசதிகளை நிறைவேற்றிக்கொள்வதற்குமான இயலுமை கிடைத்தது.

இலங்கையின் தென் பகுதியிலுள்ள சில பெண்கள் தையல் கூட்டுறவு செயற்பாட்டை ஆரம்பிப்பதற்காக நுண்நிதிக் கடன் பெற்றார்கள். இந்தக் கடன்தொகை அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், வருமானம் ஈட்டுவதற்கும் உதவியது.

நுண்நிதி என்பது மேஜிக் கோல் அல்லது மேஜிக் பிரம்பு அல்ல என்பதனை புரிந்துகொள்வது மிக முக்கியமானதாகும். அது மக்களது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தக்கூடிய ஒரு கருவியாகும். இருப்பினும் அதில் அச்சுறுத்தல்கள் இல்லையென்று சொல்லவும் முடியாது.

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள நபரொருவர் மீன் வளர்ப்பு நடவடிக்கையை ஆரம்பிப்பதற்காக நுண்நிதிக் கடன் பெற்றார். தனது வருமானத்தை அதிகரிப்பதற்கும், தனது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்வதற்கும் அந்த கடன் அவருக்கு உதவியது.

மேற்குறித்த சம்பவங்கள் இலங்கையில் நுண்நிதிச் செயற்பாடுகளின் மூலம் உதவி பெற்ற பல நபர்கள் சார்ந்த சில உதாரணங்களாகும். நுண்நிதிச் செயற்றிட்டம் நாட்டின் வறுமை ஒழிப்பு மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது. இருப்பினும் நுண்நிதி என்பது மேஜிக் கோல் அல்லது மேஜிக் பிரம்பு அல்ல என்பதனை புரிந்துகொள்வது மிக முக்கியமானதாகும். அது மக்களது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தக்கூடிய ஒரு கருவியாகும். இருப்பினும் அதில் அச்சுறுத்தல்கள் இல்லையென்று சொல்லவும் முடியாது. இதன்போது நுண்நிதியானது முறைமைப்படுத்தப்பட்டுள்ளது எனவும், கொள்ளையடிக்கும் பாங்கிலான முறைகளிலிருந்து கடன் பெறுவோர் பாதுகாக்கப்பட்டுள்ளனர் எனவும் உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும், அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

– பிரஜை

- **நுண்நிதியாக்கல் தொடர்பில் உங்களது சங்கத்தின் கருத்து எவ்வாறானது ?**

நுண்நிதி கடன் என்று கூறியவுடன், கடன் கொடுப்பதும் கடன் வாங்குவதுமே என இன்று பெரும்பாலானோர் எளிமையாக சிந்திக்கும் விடயமாக உள்ளது. அதேவேளை கடன் வழங்குவோர் ஆபத்தானவர்கள் என்றும், கடன் பெறுவோர் மிகவும் அப்பாவிகள் என்று கருதும் மனப்பாங்கும் சமூகத்தில் நிலவுகிறது. உண்மை அதுவல்ல. நாம் சங்கம் என்ற அடிப்படையில் இதனை மிகவும் பரந்த ஒரு விடயமாக கருதுகிறோம். நாம் கடன் வழங்குவதற்கு முன்னதாக சமூக மட்ட அமைப்புகளை உருவாக்குகிறோம். அதனூடாக கிராமங்களிலுள்ள பெண்களை வலுப்படுத்தும் செயன்முறை இடம்பெறுகிறது. அதற்காக அதிகளவிலான தெளிவுபடுத்தல்களை இரண்டு மூன்று மாதங்கள் மேற்கொள்கிறோம். நிதிசார் அறிவைப் பெற்றுக்கொடுப்பதே அந்த தெளிவுபடுத்தல் செயற்பாடுகளின் குறிக்கோளாகும். கடன் முகாமைத்துவம், கடனை மீளச் செலுத்துதல், சேமிப்பு போன்ற அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் மக்களை தெளிவுபடுத்துகிறோம். அதன் மூலம் அவர்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்பிய பின்னரே கடன் வழங்கப்படுகிறது. அதை விடுத்து இது சிறுகடன் வழங்குதல் எனும் எளிமையான அர்த்தம் எம்மிடம் இல்லை.

- **இந்த முறையினூடாக நாட்டின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா ?**

நிச்சயமாக ஏற்பட்டுள்ளது. அதற்கான பெரும் பங்களிப்பு இன்றும் வழங்கப்படுகிறது. கொவிட் பெருந்தொற்று காலத்திலும், பொருளாதார வீழ்ச்சியாலும் பெரும்பாலும் ஏழை மக்களே நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அவர்களுக்கு எந்தவொரு உதவியும் கிடைக்கவில்லை. அன்றாட தொழிலை இழந்தார்கள். பிள்ளைகள் பாடசாலைக்குக் கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் பெண்கள் இந்த கடன்களை பெற்றதன் மூலம் ஓரளவு நிவாரணம் பெற்றார்கள். யாரிடமும் கையேந்த வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படவில்லை. சிலர் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கினார்கள். இது நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பலமாக அமைந்தது. இது மிகவும் சிறந்த திட்டமாகும். இதன் மூலம் கிராமங்களுக்கு பெரும் பலம் கிடைக்கிறது. குடும்ப அலகுகள் பலமடைதல் என்பது நாட்டின் பொருளாதாரத்துக்கான சிறந்த போக்காகும்.

- **நுண்நிதிக் கடன் தொடர்பான உடன்படிக்கைகள் மற்றும் ஆவணங்கள் ஆங்கில மொழியில் இருப்பதன் காரணமாக குடிமக்களின் மொழிக் கொள்கையின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது. அது தொடர்பான சங்கத்தின் கருத்து என்ன ?**

சங்கம் என்ற ரீதியில் அந்த பிரச்சினையை தீர்த்து வைக்க முயற்சியெடுத்து வருகிறோம். தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நாம் வேலைகளை செய்கிறோம். அந்த நிலையை இலங்கையில் பெரும்பாலும் காணக்கூடியதாக உள்ளது. தற்போது அரச அங்கீகாரம் பெற்ற வங்கிகள் கூட கடன் கொடுக்கல்வாங்கல்களின் போது ஆங்கில ஆவணங்களையே வழங்குகின்றனர். அதிலுள்ள விடயங்கள் தொடர்பில் கடன் பெறுபவர் மட்டுமன்றி வங்கி ஊழியர்கள் கூட அறிந்துள்ளனரா என்பது சந்தேகதம்தான். இந்த நிலையை மாற்றுவதற்கு சங்கம் என்ற அடிப்படையில் முயற்சியெடுத்து வருகிறோம்.

புகைப்படம் Udaya Bandara

உதய பண்டார
கௌரவ தவிசாளர்
இலங்கை நுண்நிதி தொழில்வாண்மையாளர்கள் சங்கம்

இவை ஒழுங்குபடுத்துதல் மூலம் சீர்செய்யப்பட வேண்டிய பிரச்சினைகளாகும்

- **மக்களுக்கு நுண்நிதிச் சேவை வழங்கும் நிறுவனங்களின் அதிகமான வட்டிவீதம் பாரதூரமான பிரச்சினையாக உள்ளது. அந்த வட்டியை சலுகையான நிலைக்கு மாற்ற முடியாதா?**

நிதிச் சேவை வழங்கும் நிறுவனங்கள் வங்கிகளிடம் கடன் பெற்றே இந்த சேவைகளை முன்னெடுக்கின்றன. அதன் காரணமாக இந்த நிறுவனங்களை இயக்குதல், பராமரித்தல், ஊழியர்களுக்கான சம்பளம் வழங்குதல் போன்ற அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவற்றையும் உள்ளடக்கியே இந்த செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக கூடுதலான வட்டியை அறவிட வேண்டுமென நாம் சொல்லவில்லை. ஆனாலும் வட்டி வீத அதிகரிப்பு கடந்த காலத்தில் மத்திய வங்கியாலும் மேற்கொள்ளப்பட்டது. வட்டி வீதத்தை நிலையான மட்டத்தில் வைத்திருக்க முடியாது என மத்திய வங்கி தெளிவாக அறிவித்தது. அந்த சந்தர்ப்பத்தில் கூட வட்டி வீதத்தை 35% உச்ச மட்டத்தில் பேணுமாறு நாம் எமது உறுப்பினர்களுக்கு தெரிவித்தோம்.

- **இலங்கையில் சுமார் பத்தாயிரம் கடன் வழங்கும் நிறுவனங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. உங்களது சங்கத்தில் எத்தனை நிறுவனங்கள் உறுப்புரிமை பெற்றுள்ளன ?**

51 நிறுவனங்கள் உறுப்புரிமை பெற்றுள்ளன. நீண்டதொரு செயன்முறையின் பின்னரே நாம் எமது சங்கத்தில் உறுப்புரிமையை வழங்குகிறோம். இப்போதைக்கு எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லை. நாம் எப்போதும் அந்த நிறுவனங்களை மேற்பார்வை செய்து வருகிறோம்.

- **தற்போது நான்கு (4) நிறுவனங்கள் மட்டுமே மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டு, மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. உங்களது சங்கத்தில் உறுப்புரிமை பெற்ற ஏனைய நிறுவனங்களை ஏன் மத்திய வங்கி அங்கீகரிக்கவில்லை ?**

இந்த விடயம் மத்திய வங்கிக்கு புதியதாகும். அவர்களும் இது தொடர்பாக மேலும் கற்றாய்வுகளை செய்கின்றனர். தற்போது பெருமளவான மூலதனத்தை கொண்டுள்ள நிறுவனங்களை மட்டுமே மத்திய வங்கி அங்கீகரித்துள்ளது. அதன் காரணமாக மத்திய வங்கியின் நிபந்தனைகளை பூர்த்தி செய்த நான்கு நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்த நிலை மேம்படுத்தப்பட்டு, பெருமளவு கம்பனிகள் மத்திய வங்கியின் நம்பிக்கையை பெறும் நிலை ஏற்படும்.

கடன் பெற்றவர்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களின் ஒழுக்கமின்மையே இவ்வாறான பல பிரச்சினைகளுக்கான காரணமாகும். அத்துடன் இந்த நாட்டு மக்களிடம் நிதி தொடர்பான அறிவின்மை, சேமிப்பின்மை போன்றவையும் வேறு சில காரணங்களாகும். இவை அனைத்தையும் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். எப்போதும் தவறுகளை மட்டும் கதைத்துக் கொண்டிருக்க முடியாது.

- **நுண்நிதிச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பில் அதிகார சபையொன்று அவசியம் எனக் கருதுகிறீர்களா ?**

நிச்சயமாக, அதனை விரைவாக மேற்கொள்ளுமாறு நாம் தற்போதைய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம். தற்போது ஏற்பட்டுள்ள பல பாரதூரமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை உருவாக்கப்பட வேண்டும். தற்போது காளான் முளைப்பது போன்று நுண்நிதி நிறுவனங்கள் உருவாகி வருகின்றன. மத்திய வங்கியால் கூட இது தொடர்பாக குறைந்த அளவிலேயே செயற்பட முடியும். அரசாங்கம் தலையீடு செய்து இந்த பிரச்சினையை தீர்த்துவைக்க வேண்டும். தற்போது சங்கம் என்ற ரீதியில் நாமும் குறைவாகவே செயற்படுகிறோம். இருப்பினும் நுண்நிதிச் செயற்பாடுகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் போது எமது சங்கத்தைக் கூட தரமற்ற நிறுவனங்களைப் பார்ப்பது போன்றே பார்க்கிறார்கள். இந்த நிலைமையை மாற்ற வேண்டுமெனின், விரைவாக இதற்குரிய அமைச்சரேனும் தலையீடு செய்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையை நிறுவ வேண்டும்.

- **நுண்நிதி கடன் பெற்ற பலர் கடன் அறிவீடு செய்ய வரும் நபர்களால் பாலியல் பலாத்காரங்களுக்கு உட்பட்டுள்ளனர். அத்துடன் சில தற்கொலை சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த துர்ப்பாக்கிய நிலை தொடர்பில் சங்கம் அறிந்துள்ளதா ?**

இவ்வாறான பல பிரச்சினைகள் எமக்கும் தெரியும். கடன் பெற்றவர்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களின் ஒழுக்கமின்மையே இவ்வாறான பல பிரச்சினைகளுக்கான காரணமாகும். அத்துடன் இந்த நாட்டு மக்களிடம் நிதி தொடர்பான அறிவின்மை, சேமிப்பின்மை போன்றவையும் வேறு சில காரணங்களாகும். இவை அனைத்தையும் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். எப்போதும் தவறுகளை மட்டும் கதைத்துக் கொண்டிருக்க முடியாது. அதற்கான மாற்றுத் தீர்வுகளைக் கண்டறிய வேண்டும். ஊடகங்கள் கடன் பெற்றவர்களின் கருத்துக்களுக்கு மட்டுமே இடமளிக்கின்றன. கடன் வழங்கும் நிறுவனங்களுடன் கதைப்பதில்லை. கடன் பெறுவதில் காட்டும் விருப்பம் கடனை மீள செலுத்தும் போது இருப்பதில்லை. அது மனித இயல்பாகும். அவ்வாறு தெரிவித்து கடன் வழங்கியவர்கள் மீது குற்றம் சாட்டுவது உகந்ததல்ல. இவை ஒழுங்குபடுத்தலின் கீழ் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள்.

- **இப்போதைக்கு கடன் பெற்றவர்களின் கவலைகள், பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கான பொறிமுறை சங்கத்தில் இருக்கிறதா ?**

அனைத்து முறைப்பாடுகளையும் இருபத்திநான்கு மணித்தியாலமும் பெற்றுக்கொள்ளும் வகையில் அலுவலர்களை ஈடுபடுத்தியுள்ளோம். அது தொடர்பாக இராஜாங்க அமைச்சருக்கும் அறிவித்துள்ளோம். எதிர்காலத்தில் பெரும்பாலான குறைபாடுகளை நிவர்த்தி செய்து இந்த துறையில் இயங்கலாம் என கருதுகிறோம். பிணைவைக்க முடியாத நபர்கள் கூடுதலாக இருப்பதே அதற்கு காரணமாகும். அவ்வாறான நபர்களுக்கே நாம் கடன் வழங்குகிறோம். அவ்வாறு வழங்கும் போது எமக்கும் பெரும் அச்சுறுத்தல் இருக்கிறது. இந்த இரு தரப்பினரும் சிறந்த புரிதலுடன் செயற்பட வேண்டியது அவசியமானதாகும். இது மிகச்சிறந்தவொரு செயன்முறையாகும். இந்த திட்டம் பங்களாதேஷ் நாட்டில் வெற்றிபெற்றது எனின், நாமும் அதில் வெற்றி பெறுவதற்காக அனைவரும் ஒத்துழைப்புடன் முயற்சிக்க வேண்டும்.

– டிரான் பங்ககமஆராச்சி

நுண்நிதிச் செயற்பாடுகள், வறுமை நிலை மற்றும் அரசியல்

தற்போதைய காலத்தில் அரசியல் இல்லாத எதுவுமில்லை என்பது போன்றே நுண்நிதித் துறையும் அரசியல் கைப்பொம்மையாக மாறியுள்ளது. ஆட்சியில் இருக்கும் அரசாங்கமே எப்போதும் நுண்நிதித் துறையின் பிரதான தீர்மானமெடுக்கும் தரப்பாக இருக்கின்றது. அதன் காரணமாக நுண்நிதி நிறுவனங்களுக்கான நிதி மற்றும் ஏனைய சலுகைகளை வழங்கும் போது அரசாங்க தரப்பினர் எப்போதும் நுண்நிதிக் கடன் வழங்குவோரை தமது அரசியல் அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றனர். நுண்நிதி நிறுவனங்கள் அரசாங்கங்களின் கீழ் செயற்படுவதன் மூலம் அவற்றின் நிதிப் போக்குகளில் தாக்கம் செலுத்துவதாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகிறது. அதன் காரணமாக நுண்நிதி நிறுவனங்களின் சுயாதீனம் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனங்கள் கவலை தெரிவிக்கின்றன.

ஏனைய அரசியல் கட்சிகளும் நுண்நிதி கடன்பட்டோரை தமது அரசியல் பக்கம் இழுப்பதற்காக பொய்யான வாக்குறுதிகள் வழங்குவதை காணக்கூடியதாகவுள்ளது. இது வாக்காளர்களின் ஆதரவை பெறுவதற்கான ஒரு வழியாக மாறியுள்ளது. வட்டி வீதத்தை குறைத்தல், பெற்ற கடனை அறவிடாதிருத்தல், கடன் காலப்பகுதியை நீடித்தல், கடன் வழங்குதல் மற்றும் சில பிரதேசங்களில் நுண்நிதி நிறுவனங்களை நிறுவுவதாக வாக்குறுதியளித்தல் போன்ற விடயங்கள் தேர்தல் பிரச்சாரங்களின் போது அரசியல் மேடைகளில் பேசப்படும் விடயங்களாகும்.

அனைத்து துறைகளிலும் அரசியல் நுழைந்திருப்பது இலங்கையில் வறுமையை ஒழிக்க முடியாமைக்கான ஒரு காரணியாக குறிப்பிடலாம். நாட்டில் வறுமையை ஒழிப்பதற்காக நுண்நிதியாக்கல் முறைமையை சாதகமான ஒரு செயற்பாடாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனின் நுண்நிதியாக்கல் செயற்பாடானது அரசியல் தலையீடற்ற ஒரு துறையாக மாற்றப்படுவது அவசியமாகும்.

நுண்நிதி ஒழுங்குபடுத்தல் அரசியல்மயமாக்கப்பட்டதன் காரணமாகவே, அது தொடர்பில் ஏதாவது நிவாரணத்தை வழங்குவதற்காக அரசினால் 2016 ஆம் ஆண்டில் நுண்நிதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதனைக் குறிப்பிடலாம். இந்த சட்டத்தில் தேவைக்கு அதிகமாக வரையறைகளை விதித்துள்ள அதேவேளை இந்தத் துறை தொடர்பில் அரசாங்கம் தேவைக்கு அதிகமாக கட்டுப்படுத்தும் அதிகாரத்தை பெறுவதனூடாக மீண்டும் அரசியல் தலையீடுகள் இடம்பெற்றுள்ளன. அது அரசாங்கத்தின் தேர்தல் பிரச்சாரமாக மாற்றப்பட்டுள்ளது. சமூர்த்தி, ஜனசவிய போன்ற அரசின் அனைத்து நுண்நிதி முறைகளும் இறுதியில் வாக்குகளை அதிகரிக்கும் இயந்திரங்களாக மாறியுள்ளன.

அனைத்து துறைகளிலும் அரசியல் நுழைந்திருப்பது இலங்கையில் வறுமையை ஒழிக்க முடியாமைக்கான ஒரு காரணியாக குறிப்பிடலாம். நாட்டில் வறுமையை ஒழிப்பதற்காக நுண்நிதியாக்கல் முறைமையை சாதகமான ஒரு செயற்பாடாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனின் நுண்நிதியாக்கல் செயற்பாடானது அரசியல் தலையீடற்ற ஒரு துறையாக மாற்றப்படுவது அவசியமாகும். இருப்பினும் அதனை அவ்வாறு செய்வது சிரமமான ஒரு கருமமாக உள்ளது.

காலத்துக்கு காலம் வழங்கப்படும் அரசியல் வாக்குறுதிகளுக்கு மாற்றீடாக இந்தத் துறையில் நிலையான முன்னேற்றத்தை இலக்காக கொண்ட கொள்கையை உருவாக்குவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

நுண்நிதித் துறையில் அரசாங்கத்தின் தலையீடு குறைக்கப்பட வேண்டும். அதன் சுயாதீனத்தன்மை பலப்படுத்தப்பட வேண்டும்.

நுண்நிதிப் பிரச்சனையைத் தீர்ப்பது தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் நடாத்தப்பட்ட செயலமர்வு (புகைப்படம் CPA)

மத்திய வங்கி பொறுப்புக் கூற வேண்டும்

விஜயதாச ராஜபக்ச
நீதி அமைச்சர்

- **நுண் நிதிகளை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்றுள்ள பின்னணியில் மேற்படி சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதில் தாமதம் நிலவுவது ஏன்?**

இதற்கான சட்டமூலமொன்று நிதியமைச்சினால் தயாரிக்கப்பட்டு வருவதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது நிதி அமைச்சிற்குரிய விடயமாகும். எனினும் தற்போதைய தகவல்களின்படி இதுபோன்றதொரு சட்டத்தின் மூலம் இந்த விடயத்தை சரியாகக் கட்டுப்படுத்த முடியுமா என்ற சந்தேகம் எமக்கு இருக்கிறது. அதற்கான காரணம் கடந்த சுமார் பத்து வருட காலப்பகுதியினுள் நுண்நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துள்ளது. வங்கிகளிடம் இருந்து எதிர்பார்ப்பது நிறைவேற்றப்பட்டால் இப்படி நடக்காது. எனவே நீண்ட கால நோக்கில் வங்கிக் கட்டமைப்பை முறையாக சீர்செய்ய வேண்டும். விசேடமாக தமது வாடிக்கையாளர்களைச் சுரண்டுவதற்கான ஒரு சட்டமே இந்த பிரசித்தமான நுண் நிதி முறைமை.

இந்த நுண்கடன் முறைமைக்கு மக்கள் ஏன் திரும்பினார்கள்? என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகில் வேறு நாடுகளில் இவ்வாறு நடக்கவில்லை. இதற்குக் காரணம் நாட்டின் வங்கித் துறையானது நாட்டில் வாழும் சாதாரண மக்களை மறந்து விட்டமையே. வங்கிகள் தமது இலாபத்தைப் பற்றி மட்டுமே சிந்தித்தன. அரச வங்கிகளும் அதையே செய்தன. சுருக்கமாக கூறின் மத்திய வங்கியானது கடந்த காலத்தில் அதன் பொறுப்பை நிறைவேற்றவில்லை.

- **ஊடகங்கள் என்ற வகையில் நாம் இந்த பிரச்சினைகள் குறித்து மத்திய வங்கியிடம் வினவுகின்ற போது அவர்கள் மிக இலகுவாக கூறுகின்ற பதில், இது எமது விடயப் பரப்பிற்குட்பட்ட விடயமல்ல என்பது. இது மிகப் பாரதூரமான ஒரு விடயம் அல்லவா?**

இது தொடர்பில் இரு தரப்பினரும் வாக்குவாதம் செய்யக்கூடிய ஒரு விடயம் உள்ளது. உண்மையில் இந்த விடயம் அவர்களுக்குரியதா இல்லையா என்பது தொடர்பில் தெளிவான சட்டம் எதுவும் இல்லை. அவ்வாறு கூறுவதன் மூலம் மத்திய வங்கி தனது பொறுப்பை புறக்கணிக்க முடியாது. ஏனெனில் கொள்கை ரீதியான முடிவுகள் இருப்பது அவர்கள் கையிலேயே. இப்போது இதுவொரு சுயாதீன நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. நாட்டின் நிதிக் கொள்கை சார்ந்த "கொள்கைத் தீர்மானங்களை" அவர்களே எடுக்க வேண்டும். எனினும் நாடு முழுவதுமுள்ள இந்த நிறுவனங்களை அவர்களால் கண்காணிக்கவோ, ஆராய்ந்து பார்க்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. எனவே இதற்கென தனியான நிறுவனம் ஒன்றைத் தாபிக்க வேண்டும். அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் இந்தக் கிராமங்களில் உள்ள பத்துப் பதினையாயிரம் ஏழை மக்களுக்காக அதை நிரூபிக்க இவர்கள் நீதிமன்றம் செல்வார்களா? அப்படிச் செல்வதற்கு வழியில்லை. அவர்களால் செல்லவும் முடியாது. எனவே இதற்கான நடைமுறைச்சாத்திய மாற்று வழியொன்றினைக் கண்டுபிடிக்க வேண்டும்.

- **இங்கு காணக்கூடிய முக்கிய பிரச்சனை என்னவென்றால் இந்த கடன் ஒப்பந்தப் படிவங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளது. நுண்நிதிக் கடன் பெற்றுள்ள பெண்களில் பெரும்பாலானோர் ஆங்கிலம் மட்டுமின்றி சிங்களம் கூட முடியாதவர்களாக உள்ளனர். இது பாரதூரமான அநீதி இல்லையா? இவற்றுக்கு எதிராக செயற்பட முடியாதா?**

முடியும். அது நமது சட்டத்தில் உள்ளது. யாதேனும் ஒன்றைத் தெளிவுபடுத்தி அதனைப் புரிந்துகொண்டதாக ஒரு உத்தரவாதம் இருக்க வேண்டும். அந்தச் சான்றிதழை பொறுப்பான ஒருவர் வழங்க வேண்டும். இப்போது நடப்பது என்னவென்றால் பாரம்பரிய முறைப்படி இவற்றில் கையெழுத்திட்டிருந்தால் அது செல்லுபடியாகும் என்று நீதிமன்றமும் ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் இங்கு மோசடி நடந்திருந்தால், பொய்யான ஆவணம் இருந்தால், அதனை சமர்ப்பிக்க முடியும். ஆனால் இந்தக் கிராமங்களில் உள்ள பத்துப் பதினையாயிரம் ஏழை மக்களுக்காக அதை நிரூபிக்க இவர்கள் நீதிமன்றம் செல்வார்களா? அப்படிச் செல்வதற்கு வழியில்லை. அவர்களால் செல்லவும் முடியாது. எனவே இதற்கான நடைமுறைச்சாத்திய மாற்று வழியொன்றினைக் கண்டுபிடிக்க வேண்டும். மக்களுக்கு பாதுகாப்பான முறையில்

கடன் வழங்கும் முறைமையொன்றினை உருவாக்குவதே அதற்கான சிறந்த தீர்வாகும். தற்போது இங்கிருக்கின்ற கறுப்பு கந்து வட்டிக்காரர்கள் உருவாக்கியுள்ள இந்த வங்கி முறை இதுவாகும். அதற்கு மத்திய வங்கி பொறுப்புக் கூற வேண்டும்.

- **நீங்கள் சொல்லும் அந்த முறையான அமைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் பணியை நமது நாட்டின் உள்ளூராட்சிக் கட்டமைப்புடன் இணைக்க முடியாதா?**

சற்று கடினமான வேலைதான். இதனை மாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்த முயற்சிப்பது வெற்றியளிக்காது. மாகாண மட்டத்திற்கு தேவையான வழிமுறைகள் அங்கு இல்லை. இது அடிப்படையில் அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டிய ஒரு விடயமாகும். நான் இப்படிச் சொல்வதால் இதனை 24 மணி நேரத்தில் மீண்டும் திருப்பிவிட முடியாது. சரியான முறையில் நீண்ட செயற்பாட்டிற்கு செல்ல வேண்டும்.

- **நுண்நிதி காரணமாக களைப்படைந்துள்ள மக்களால் யாதேனும் அனுசரணை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பினைக் கொண்டிருக்க முடியுமா?**

நீதியமைச்சர் என்ற வகையில் கூறுவதாயின், அரசாங்க கொள்கைகளை வேறு எந்த அமைச்சு வழங்கினாலும் பயனில்லை. அதனால்தான் நாங்கள் நீதியை நிலைநாட்டுவதற்கான சட்டங்களை இயற்றியுள்ளோம்.

இதனையும் சாதாரண முறைமைக்கு அப்பால் செய்ய முடியும். நிதியமைச்சும் நீதியமைச்சும் இணைந்து இதைச் செய்ய வேண்டும். நிதி அமைச்சு வங்கிக் கட்டமைப்புகளை அறிந்து வைத்திருக்கிறது. ஆனால் சட்டம் பற்றி அறிந்திருப்பது குறைவு. சட்டம் பற்றிய தெளிவு எமக்கிருக்கிறது. வங்கிகளைப் பற்றிய தெளிவு குறைவு. எனவே இதை நாம் இருசாராரும் இணைந்தே செய்ய வேண்டும். நானும் ஒரு பழைய வங்கியாளன் என்பதனால் எனக்கு அது பற்றிய தெளிவும் உள்ளது. அது எவ்வாறெனினும் தற்போது இப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளவர்களின் 100வீ பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. இந்த நாட்டில் அப்படி நடக்க வாய்ப்பில்லை. ஆனாலும் எதிர்காலத்தில் இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியுமா என்று ஆராய்ந்து பார்ப்பேன்.

(கவனிக்க: நுண்நிதிப் பிரச்சினைகளுடன் தொடர்புடைய சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக விடயப் பொறுப்பான அமைச்சர் செஹான் சேமசிங்கவைத் தொடர்பு கொண்டு இது குறித்துப் பேசுவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது பலனளிக்கவில்லை. குறித்த நேரத்தில் குறித்த நாளில் தொடர்புகொள்ளுமாறு அமைச்சர் கூறிய போதிலும் அந்த நேரங்களில் வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதை நினைவூட்டுகிறோம்.)

நுண்நிதியியலாக்க செயற்பாட்டில் இலங்கையின் பயண வழித்தடங்கள்

இலங்கையில் நுண்நிதியியலாக்கச் செயற்பாடானது இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் நீண்டு செல்லும் வரலாற்றைக் கொண்டுள்ளது. முறையாக ஆரம்பிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனம், 1906 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சிக்கன மற்றும் கடன் கூட்டுறவு சங்கங்கள் (TCCS) ஆகும். இந்த சங்கங்கள் கிராமப்புற மக்களுக்கு கடன் மற்றும் சேமிப்புச் சேவைகளை வழங்கின.

1970 களின் போது TCCS இன்று இலங்கையின் மிகப்பெரிய நுண்நிதி நிறுவனமான சணச இயக்கமாக மறுசீரமைக்கப்பட்டது. தற்போது சணச இயக்கமானது இரண்டு மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன், கடன்கள், சேமிப்புகள், காப்புறுதிகள் மற்றும் பயிற்சிகள் உட்பட பலதரப்பட்ட நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக மாறியுள்ளது.

1980 களில் இலங்கை அரசாங்கம் ஜனசவிய திட்டத்தின் ஊடாக நுண்நிதியியல் திட்டங்களை ஊக்குவிக்க ஆரம்பித்தது. இந்தத் திட்டத்தினூடாக வறுமையான குடும்பங்களுக்கு அவர்களது வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கு அல்லது விரிவாக்குவதற்கு உதவும் வகையில் கடன்கள் மற்றும் பிற உதவிகளை வழங்கியது.

1990களில் இருந்து இலங்கையில் நுண்நிதியியலானது துரித வளர்ச்சி அடைந்தது. அரச சார்பற்ற நிறுவனங்கள் (என்ஜிஓக்கள்) மற்றும் பல வணிக வங்கிகளும் நுண்கடன் சந்தையில் நுழைந்து, அதிகளவான மக்களுக்கு பரந்த அளவிலான சேவைகளை வழங்கின. அதனால்தான் இலங்கையில் நுண்கடன் துறையானது நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டு புத்துயிர் பெற்றுள்ளது. 10,000க்கும் மேற்பட்ட நுண்நிதி நிறுவனங்கள் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு சேவைகளைச் செய்கின்றன.

இலங்கையில் வறுமையை குறைப்பதிலும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதிலும் நுண்நிதியியலாக்கம் கணிசமான பங்காற்றியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையின் நுண்நிதியியல் வரலாற்றில் சில முக்கிய மைல்கற்கள் பின்வருமாறு.

- 1906 இல் முதலாவது சிக்கன மற்றும் கடன் கூட்டுறவு சங்கம் (TCCS) நிறுவப்பட்டது.
- 1970 (TCCS) சணச இயக்கமாக மறுசீரமைக்கப்பட்டது.
- 1980களில் - இலங்கை அரசாங்கம் ஜனசவிய திட்டத்தை ஆரம்பித்தது.
- 1990களில் - அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பல வணிக வங்கிகளும் நுண்கடன் சந்தையில் நுழைந்தன.
- 2016 நுண்நிதிப் பிரிவை ஒழுங்குபடுத்தும் வகையில் நுண்நிதிச் சட்டம் இயற்றப்பட்டது.

இலங்கையின் நிதித்துறையானது பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. அதிக வட்டி வீதம், மிகவும் வறிய மக்களால் நிதிச் சேவைகளை அணுக முடியாமை, நிதி பற்றிய குறைந்த கல்வியறிவு, இயற்கை அனர்த்தங்கள் போன்ற சவால்களுக்கு மத்தியிலும் கூட நுண் நிதியாக்கத்தில் இலங்கையின் வெற்றிக் கதை இதுவாகும். இது வறுமையைக் குறைப்பதற்கும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், பெண்களை வலுவூட்டுவதற்கும் உதவியுள்ளது. எனவே, இதனை முறையான ஒழுங்குபடுத்தலுடன் முன்னோக்கி நகர்த்த முடியுமெனில் எதிர்வரும் ஆண்டுகளில் நுண்நிதித் துறையானது தொடர் வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்க முடியும்.

– பிரஜை



யூனுஸ் ஜோப்ரா கிராமத்தின் பெண்களிடம் பேசுகிறார் (புகைப்படம் yale.edu)

ஏழைகளின் வங்கியாளர்

நுண்நிதிக் கதையில் அவர் முதன்மையான பாத்திரமாவார். அவரைத் தவிர்த்து நுண்நிதி தொடர்பாக கதைக்க முடியாது. அவரது பெயர் முஹமட் யூனூஸ் ஆகும்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு சிறுகடன் வழங்கும் நுண்நிதி எண்ணக்கருவின் முன்னோடியாக அவர் கருதப்படுகிறார். பங்களாதேஷ் நாட்டவரான அவர் பொருளியல் நிபுணராவார். சமூக தொழில்முயற்சியாளரும் கூட.

1976ஆம் ஆண்டில் "கிராமீன் வங்கி"யை ஆரம்பித்த அவர், அதனை உலகின் மிகப்பாரிய நிதி நிறுவனமாக மாற்றினார். யூனூஸ் 2006ஆம் ஆண்டில் அதற்காக நோபல் சமாதானப் பரிசையும் பெற்றார்.

யூனூஸ் அவர்கள் 1940ஆம் ஆண்டில் பங்களாதேஷ் நாட்டின் சித்தகொங் பகுதியில் பிறந்தார். டாக்கா பல்கலைக்கழகத்தில் பொருளியல் விஞ்ஞானத்தைப் பயின்ற அவர், பின்னர் அங்கேயே கலாநிதி பட்டத்தையும் பெற்றார். அமெரிக்க டார்பன்பீல்ட் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பட்டத்தை பெற்ற பின்னர் மீண்டும் பங்களாதேஷ் நாட்டுக்கு வந்து தான் கல்விகற்ற சித்தகொங் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பாடத்தைக் கற்பித்தார்.

1976 ஆம் ஆண்டில் ஜொப்ரா எனும் கிராமத்தில் உள்ள ஏழைப் பெண்களுக்கு கடன் வழங்க ஆரம்பித்தார். அந்த பெண்கள் வங்கிகளில் கடன் பெற முடியாதவர்கள் எனவும், கடன் பெறுவதற்காக பெறுமதியான பிணைகள் அவர்களிடம் இல்லை எனும் விடயத்தையும் யூனூஸ் புரிந்து கொண்டார். அதன் காரணமாக "நம்பிக்கை கோட்பாட்டை" யூனூஸ் அவர்கள் கடனுக்கான அடிப்படையாக கருதினார். அதனை முறைமைப்படுத்துவதற்காக கடன்பெறுவோர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

"கிராமீன் வங்கி"க்கு மேலதிகமாக யூனூஸ் அவர்கள் நுண்நிதி மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான மேலும் பல அமைப்புகளை ஆரம்பித்தார். அவர் "ஏழைகளின் வங்கியாளர்" மற்றும் "சமூக தொழில்முயற்சிகளை உருவாக்குதல்" ஆகிய நூல்களின் ஆசிரியரும் ஆவார்.

அதன் விளைவாக "கிராமீன் வங்கி" பங்களாதேஷ் நாட்டிலுள்ள ஏழை மக்களுக்கு நுண்கடன் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தது. அத்திட்டம் 1983 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் 90 மில்லியனுக்கும் அதிகமான கடன்பட்டோருக்கு 100 பில்லியன் டொலருக்கு கூடுதலான தொகை கடன் வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அவர் மில்லியன் கணக்கான மக்களை வறுமையிலிருந்து விடுவிப்பதில் வெற்றிகண்டுள்ளார்.

"கிராமீன் வங்கி"க்கு மேலதிகமாக யூனூஸ் அவர்கள் நுண்நிதி மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான மேலும் பல அமைப்புகளை ஆரம்பித்தார். அவர் "ஏழைகளின் வங்கியாளர்" மற்றும் "சமூக தொழில்முயற்சிகளை உருவாக்குதல்" ஆகிய நூல்களின் ஆசிரியரும் ஆவார்.



யூனூஸ் சமாதானத்திற்கான நோபல் பரிசுடன்
(புகைப்படம் John Mcconnico/AP)

யூனூஸ் அவர்கள் நோபல் சமாதான பரிசுக்கு மேலதிகமாக சுதந்திர ஜனாதிபதி பதக்கம் மற்றும் பத்மஸ்ரீ உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவர் சமூக மாற்றத்துக்கான முன்னணி ஆலோசகர் என்பதுடன், ஏழைகளின் கதாநாயகனாகவும், ஏழைகளின் வீரராகவும் கருதப்படுகிறார்.

– பிரஜை –

நுண்நிதி நிறுவனங்களின் செயலாற்றுகை

(புகைப்படம் GIZ-PRoMIS)

நுண்நிதி தொடர்பாக 2006ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பெறுபேறுக்கு அமைய இலங்கையில் 14,000 க்கும் அதிகமான நுண்நிதி வசதி வழங்கும் நிறுவனங்கள் இயங்குவதாக கண்டறியப்பட்டுள்ளது. அவற்றில் 5424 சணச சங்கங்களின் வலையமைப்பும் உள்ளடங்குகிறது. அச்சங்கங்களில் சுமார் 50% இயங்கா நிலையில் இருப்பதும் மேற்படி அறிக்கை மூலம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே அங்கீகரிக்கப்பட்ட மட்டத்திலான நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை 14,000 தொகையை விடவும் குறைவானது என்பது தற்போது உறுதியாகிறது. 2006-2007 ஆண்டுகளில் GIZ-PRoMiS செயற்திட்டத்தின் மூலம் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிற்கமைய நாட்டில் ஆகக்குறைந்தது 10,000 வரையான நிதிச் சேவை வழங்கும் நிறுவனங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. மத்திய வங்கி அறிக்கையின் படி 16,500 க்கும் கூடுதலான நுண்நிதிச் சேவை நிலையங்கள் இயங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

GIZ-PRoMiS நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிற்கமைய நுண்நிதி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் 90% மக்கள் கிராமப்புறங்களில் வசிப்பவர்களாவர். இருப்பினும் பெருந்தோட்ட பிரதேசங்களில் குறைந்தளவான நுண்நிதி நிறுவனங்களே இயங்குகின்றன. அது மொத்த நுண்நிதி நிறுவனங்களின் எண்ணிக்கையில் 1% ஆகும். மிகவும் வறுமையிலுள்ள ஏழை மக்களுக்கு நுண்நிதிக் கடன்கள் கிடைப்பதில்லை என்பது இதன்மூலம் தெரியவருகிறது. மாதாந்தம் ரூ. 3,000 வருமானம் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் 50% ஆக இருக்கும் அதேவேளை மாதாந்த வருமானம் ரூ. 5,000 பெறுபவர்களுக்கு 82% கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

GIZ-PRoMIS நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிற்கமைய நுண்நிதி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் 90% மக்கள் கிராமப்புறங்களில் வசிப்பவர்களாவர். இருப்பினும் பெருந்தோட்ட பிரதேசங்களில் குறைந்தளவான நுண்நிதி நிறுவனங்களே இயங்குகின்றன. அது மொத்த நுண்நிதி நிறுவனங்களின் எண்ணிக்கையில் 1% ஆகும்.

போர் காலம் முடிவடைந்த பின்னர் வங்கிகள் மற்றும் நுண்நிதி நிறுவனங்கள் வடக்கு பிரதேசத்துக்கும் பரவலடைந்தன. மாகாண மட்டத்தில் நுண்நிதி நிறுவனங்கள் நுண்நிதிச் சேவை வழங்கல் விகிதாசாரம் பின்வருமாறு உள்ளது.

மேல் மாகாணம்	12.2%
மத்திய மாகாணம்	10.1%
தென் மாகாணம்	24.0%
வடமேல் மாகாணம்	10.2%
வடமத்திய மாகாணம்	3.9%
ஊவா மாகாணம்	10.8%
சப்ரகமுவ மாகாணம்	11.2%
வடக்கு மாகாணம்	5.2%
கிழக்கு மாகாணம்	12.3%

2010 ஆம் ஆண்டளவில் வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகை 60 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். அவற்றில் கிராமிய அபிவிருத்தி வங்கி மற்றும் சணச அபிவிருத்தி வங்கி ஆகியவை கூடுதலான பங்களிப்பை வழங்கியுள்ளன. அதற்கு மேலதிகமாக சர்வோதய சீட்ஸ் நிறுவனத்தினால் 3 பில்லியன் ரூபாவுக்கு கூடுதலான தொகை வழங்கப்பட்டுள்ளது. இயங்கிவரும் பெரும்பாலான நுண்நிதி நிறுவனங்கள் சிறிய அளவில் தமது சேவைகளை வழங்கி வருகின்றன எனும் விடயம் இதனூடாகத் தெரியவருகிறது.

– டிரான் பங்கமஆராச்சி

01 ஆம் பக்கத் தொடர்ச்சி

கடன் நெருப்பில் எரியும்...

இலகுவானதாக இருக்கவில்லை. சில வேளைகளில் அது வாழ்வா, சாவா எனும் போராட்டமாக இருந்தது. இருப்பினும் தைரியம் மிகுந்த மனிதர்களாகிய அவர்கள் அயராது போராடினார்களே தவிர அவர்கள் முணுமுணுத்ததற்கான அல்லது சலிப்படைந்ததற்கான சாட்சிகள் எதுவுமில்லாத நிலமே இது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தினால் முப்பது ஆண்டுகளில் நிறைவு செய்வதற்காக திட்டமிடப்பட்ட மகாவலி திட்டத்தை ஆறு ஆண்டுகளில் நிறைவு செய்து ஜே.ஆர் ஜயவர்தன அரசாங்கம் விவசாய குடியேற்றங்களுக்கு ஒளியூட்டியதாக சொல்லப்பட்டாலும் அதில் உண்மை எதுவுமில்லை. ஏனென்றால் சேனபுர, காகம, கட்டியாவ போன்ற விவசாய குடியேற்றங்கள் மகாவலி தண்ணீரால் ஊட்டம் பெற்றதாகத் தெரியவில்லை.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக செல்லும் பெண்கள் மூலமாகவே விவசாயிகள் தமது வீடு வாசல்களை அமைத்துக் கொள்கிறார்கள். விவசாயக் குடியேற்றங்களை உருவாக்கிய டி.எஸ். சேனாநாயக்க அவர்கள் குடியேற்ற மக்களுக்கான வீடுகள் மற்றும் விவசாய உபகரணங்களை வழங்கியிருந்த போதிலும், காலம் கடந்து செல்கின்ற போது வீடுகள் மற்றும் காணித் தேவைகள் இக்குடியேற்றங்களில் பற்றி எரியும் பிரச்சினையாக உருவெடுத்தது.

புதிய தலைமுறையினர் விவசாயத்திலிருந்து விலகுதல் மற்றும் தமது அறுவடைக்கு உரிய விலை கிடைக்காமை போன்ற காரணிகளால் குடியேற்றவாசிகள் முகங்கொடுக்கும் நெருக்கடிகள் மிகமிக அதிகம். பெண்கள் தொழிலுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் அதேவேளை இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்துகொள்ளும் போக்கு தெளிவாகத் தெரியும் விடயமாகும். யுவதிகள் ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில்புரிந்து இளமைக் கனவுகளை நனவாக்க முயற்சித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

> **குடும்பத்தில் மனைவி அல்லது தாய் தனது எல்லையற்ற கடமைகள் மற்றும் பொறுப்புக்களில் இருந்து விலகுகின்ற போது அதனால் பாதிக்கப்படுகின்ற பிள்ளைகள் சமூகத்தில் பிரச்சினைக்குரியவர்களாக மாறுகின்றனர்.**

காட்டும் அதேவேளை அதன்போது தோன்றும் பல பிரச்சினைகள் அம்மக்கள் மத்தியில் மேலும் பல நெருக்கடிகள் மற்றும் சிக்கல்களை உருவாக்கியது.

காணிப் பிரச்சினை, தண்ணீர்ப் பற்றாக்குறை மற்றும் அறுவடைக்கு நியாயமான விலை கிடைக்காமை போன்ற விவசாய பிரச்சினைகளால் அதிகரித்துவரும் கிரயச்செலவு போன்ற பிரச்சினைகளுக்கு

போராட்டத்தில் ஈடுபடும் பாதிக்கப்பட்ட பெண்கள். (புகைப்படம் www.dailymirror.lk)

சீர்குலைந்துவரும் விவசாயமானது தொடர்ந்தும் குடியேற்றவாசிகளை துன்பத்துக்கு உள்ளாக்கி வருவதனால் சில விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை கைவிட்டு கொழும்புக்கு செல்லும் நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் வீட்டில் தனிமையில் உள்ள பெண்களை இலக்காக கொண்ட கடன் வழங்கும் நிறுவனங்கள் அவர்களை இரையாக்கும் வகையில் விவசாய குடியேற்றங்களை நோக்கி பறந்துவரத் தொடங்கினார்கள். அது எவ்வித்திலும் வறுமையை ஒழிப்பதற்கான தீர்வாக அமையவில்லை.

இந்த நுண்நிதி நிறுவனங்களால் மிகக்கூடுதலான வட்டி அறவிடப்பட்டது.

கடன் பெறுவதற்காக நிறைவு செய்ய வேண்டிய நிபந்தனைகள் இலகுபடுத்தப்பட்ட அதேவேளை சில சந்தர்ப்பங்களில் அதன் சட்டதிட்டங்களுக்குள் புகுந்து செல்வதற்கு ஆலோசனைகளை வழங்குவதற்கும் அந்த நிறுவனங்களில் பணியாற்றுவோர் பின்வாங்கவில்லை. முதலீடு மேற்கொள்ளப்படவில்லை என்பதும், உற்பத்தி இடம்பெறுவதில்லை எனவும் தெரிந்துகொண்டு கடன் வழங்குவதற்காக முன்வந்த நிறுவனங்கள் அதன் மூலம் தமது கருணையையும், அர்ப்பணிப்பையும் உண்மையில் வெளிப்படுத்தவில்லை.

எப்படியோ தவணைக் கட்டணத்தை அறவிடுவதில் மாத்திரம் அவர்கள் அக்கறை மத்தியில் குடும்ப பிரச்சினைகள் கூட ஏற்படும் அளவுக்கு இந்த நுண்நிதி நிறுவனங்களின் இரக்கமற்ற செயற்பாடுகள் உக்கிரமடைந்துள்ளன.

கொடூரமாகவும், தான்தோன்றித்தனமாகவும் செயற்படுகின்றனர். தவணைப் பணத்தை செலுத்த முடியவில்லை எனின் கடன் பெற்றவர்களின் வீடுகளிலுள்ள வீட்டுத் தளபாடங்களை எடுத்துச் செல்வது மட்டுமன்றி பாலியல் இலஞ்சம் பெறும் சம்பவங்கள் கூட இடம்பெற்றுள்ளன.

வாராந்தம், மாதாந்தம் வருகைதரும் அந்த நிறுவன பிரதிநிதிகளுடன் உறவை ஏற்படுத்திக்கொண்ட சந்தர்ப்பங்களும், திருட்டுத்தனமாக பாய்ந்தோடிய சந்தர்ப்பங்களும் சாதாரண விடயங்களாகும்.

குடும்பத்தில் மனைவி அல்லது தாய் தனது எல்லையற்ற கடமைகள் மற்றும் பொறுப்புக்களில் இருந்து விலகுகின்ற போது அதனால் பாதிக்கப்படுகின்ற பிள்ளைகள் சமூகத்தில் பிரச்சினைக்குரியவர்களாக மாறுகின்றனர். மன அழுத்தத்துக்கு உட்படுதல், கல்வியில் பலவீனமடைதல் மற்றும் சில வேளைகளில் தாய் வீட்டில் இல்லாத வீடுகளில் தந்தை, சகோதரன், வீட்டிலுள்ள முதியவர்கள் மற்றும் அயலவர்களால் துஸ்பிரயோகத்துக்கு உட்படுதல் தவிர்க்க முடியாத விடயமாக உள்ளது.

நுண்நிதிக் கடன்களை இரத்துச் செய்வதாக அவ்வப்போது அரசாங்கம் அறிவித்த போதிலும், அவ்வாறான எதுவும் இடம்பெறவில்லை எனவும் இப்போதும் வாராந்தம், மாதாந்தம் தவணைப் பணத்தை அறவிடுவதற்காக வருகைதரும் சில பிரதிநிதிகள் பணம் செலுத்தப்படவில்லை எனில், வீட்டுத் தளபாடங்களை எடுத்துச் செல்லப்போவதாக அச்சுறுத்தல் விடுப்பதாகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர்.

நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் காரணமாக குடியேற்றங்கள் பெரும் சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்பது மிகவும் தெளிவானதாகும். அதன்போது முதியோர் மட்டுமின்றி பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றனர்.

தற்போது சில நிறுவனங்கள் சென்ற இடம்கூட எதுவென்றே தெரியாமல் போயுள்ளது. மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத சில நிறுவனங்களுக்கு சரியான முகவரி கூட இருக்கவில்லை. எனவே இப்போதும் தவணைப் பணம் அறவிடுவதற்காக வருகைதரும் பிரதிநிதிகள் தொடர்ந்தும் அந்த நிறுவனங்களில் பணியாற்றுகிறார்களா இல்லையா என்பதனைக் கூட உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதுள்ளது.

குழுவிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் தவணைப் பணத்தை நிலுவையின்றி வழங்க வேண்டுமென விதிக்கப்பட்டுள்ள கடுமையான நிபந்தனைகள் தற்போது தளர்த்தப்பட்டுள்ள அதேவேளை முன்னரைப் போன்று குழுக் கூட்டங்களும் நடைபெறுவதில்லை.

கிராமங்களின் வறுமையை மேலும் அதிகரித்து பல சமூக பொருளாதார பிரச்சினைகளை உருவாக்கிய நுண்நிதி நிறுவனங்களுடனான அரசியல்வாதிகளின் தொடர்புகள் இரகசியமானதல்ல என்பதுடன், மத்திய வங்கியும் தனது பொறுப்புகளிலிருந்து விடுபட முடியாது.

நுண்நிதிக் கடன்களை இரத்துச் செய்வதாக அவ்வப்போது அரசாங்கம் அறிவித்த போதிலும், அவ்வாறான எதுவும் இடம்பெறவில்லை எனவும் இப்போதும் வாராந்தம், மாதாந்தம் தவணைப் பணத்தை அறவிடுவதற்காக வருகைதரும் சில பிரதிநிதிகள் பணம் செலுத்தப்படவில்லை எனில், வீட்டுத் தளபாடங்களை எடுத்துச் செல்லப்போவதாக அச்சுறுத்தல் விடுப்பதாகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர்.

(புகைப்படம் www.dailymirror.lk)

பெற்ற கடனை செலுத்தாதிருக்க முயற்சிப்பதில்லை எனவும், கூடுதலான வட்டியை தங்களால் தாங்கிக்கொள்ள முடியாதுள்ளது எனவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

வறுமையைப் போஷித்து பராமரித்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அதனைப் பயன்படுத்தும் அரசியல்வாதிகள் கடனை செலுத்த முடியாமல் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட மற்றும் குடும்ப பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த பெண்களுக்கு மட்டுமன்றி, அந்த நெருக்கடிகளால் பாதிக்கப்படும் ஆண்கள் மற்றும் பிள்ளைகளுக்கும் அவர்கள் பொறுப்பு கூற வேண்டும் என்பது தெளிவான விடயமாகும். ஏனெனில், இந்தளவான அழிவினை ஏற்படுத்துவதற்கு அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களின் பலமும் முழுமையான ஆசீர்வாதமும் இன்றி எந்தவொரு நிறுவனமும் செயற்பட முடியாது என்பதே அதற்கான காரணமாகும்.

– பிரஜை

போராட்டத்தில் ஈடுபடும் பாதிக்கப்பட்ட பெண்கள். (புகைப்படம் www.dailymirror.lk)

CENTRE FOR POLICY ALTERNATIVES

முகவரி : இல 6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை.
தொலைபேசி : +94112081384, +94112081385, +94112081386
தொலைநகல் : +94112081388
மின்னஞ்சல் : info@cpalanka.org
இணையதளம் : www.cpalanka.org
முகநூல் : www.facebook.com/cpasl
டுவிட்டர் : @cpasl